**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
www.wcflondon.com
wcflondon@gmail.com

# *ஒருவரை சபையில் திருத்துவது 05*

***மத்தேயு** 18:15-20,* [15] *"உன் சகோதரன் உனக்கு*
*விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் நீ போய்,*
*நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை*
*அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச்*
*செவிகொடுத்தால், உன் சகோதரனை*
*ஆதாயப்படுத்திக்கொண்டாய்.* [16]*அவன் செவி*
*கொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய*
*வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி,*
*இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ.*
[17]*அவர்களுக்கும் அவன் செவிகொடாமற் போனால்,*
*அதைச் சபைக்குத் தெரியப்படுத்து; சபைக்கும்*
*செவிகொடாதிருப் பானானால், அவன் உனக்கு*
*அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப் போலவும்*
*இருப்பானாக.*

*இங்கு பூமியில் உள்ளவரை தன்னுடைய பிள்ளைகளின் வாழ்வு தூய்மையாக இருக்க வேண்டும் என்பதே தேவனின் ஆசை. 1 பேதுரு 1:16, "நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்." (புதிய உடன்படிக்கை சபைக்கு பழைய உடன்படிக்கையான லேவியராகமம் 11:44இலிருந்து மேற்கோளாக காட்டப்பட்டுள்ளது).*

*கர்த்தராகிய இயேசு திருச்சபைக்கு போதித்தது என்னவென்பது உங்கள் மனதில் தெளிவாயிருக்கிறது என்று நம்புகிறேன்.*

***செயல்முறை 1**: அவரை நேர்முகமாக போய் சந்தித்து கிறிஸ்துவுக்கு என்று அவரை / அவளை வென்றெடுக்க முயற்சி செய்யுங்கள்.*

***செயல்முறை 2:** அவரது/அவளது குற்றத்தை மெய்ப்பிபதற்கு/ நம்பச்செய்வதற்கு இரண்டு அல்லது மூன்று சாட்சிகளை எடுத்துச் செல்லுங்கள். இதனால் அந்த நபரை திருத்தி வெற்றிபெற முடியும்.*

***செயல்முறை 3:** சபைக்குச் சொல்லுங்கள், அவர் அதை கேட்டுக்கொண்டால் அவரை/அவளை ஏற்றுக் கொள்ளுங்கள்.*

***செயல்முறை 4:** அந்த நபர் அந்த திருத்தத்தை ஏற்க மறுத்து தன்னை மாற்றிக்கொள்ள மறுத்தால் பிறகு அவரை அந்த சபையை விட்டு வெளியேற்றவும்.*

*இன்று நாம் இந்த 4ஆம் செயல்முறையை எவ்வாறு கையாள வேண்டும் என்பதை பற்றி விளக்கமாக காணலாம்.*

*எருசலேமில் உள்ள முதலாம் சபை இந்த திருத்தத்தை கையாள வேண்டியிருந்தது.*

***அப்போஸ்தலர்கள் 5: 1-11**, [1] அனனியா என்னும் பேருள்ள ஒருவனும், அவன் மனைவியாகிய சப்பீராளும் தங்கள் காணியாட்சியை விற்றார்கள். [2]தன் மனைவி அறிய அவன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, ஒரு*

*பங்கைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்.* [3]பேதுரு *அவனை நோக்கி: அனனியாவே நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?* [4]*அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்றபின்னும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய் என்றான்.* [5]*அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்கவே, விழுந்து ஜீவனை விட்டான். இவைகளைக் கேள்விப்பட்ட யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று.* [6]*வாலிபர் எழுந்து, அவனைச் சேலையில் சுற்றி, வெளியே எடுத்துக்கொண்டுபோய் அடக்கம்பண்ணினார்கள்* [7]*ஏறக்குறைய மூன்று மணி நேரத்துக்குப்பின்பு, அவனுடைய மனைவி நடந்ததை அறியாமல், உள்ளே வந்தாள்.* [8]*பேதுரு அவளை நோக்கி: நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள், எனக்குச் சொல் என்றான். அவள்: ஆம், இவ்வளவுக்குத்தான் என்றாள்.* [9]*பேதுரு அவளை நோக்கி: கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன? இதோ, உன் புருஷனை அடக்கம்பண்ணினவர்களுடைய கால்கள் வாசற்படியிலே வந்திருக்கிறது, உன்னையும் வெளியே கொண்டுபோவார்கள் என்றான்.* [10]*உடனே அவள் அவனுடைய பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டாள். வாலிபர் உள்ளே வந்து, அவள் மரித்துப்போனதைக் கண்டு, அவளை வெளியே எடுத்துக்கொண்டுபோய்,*

அவளுடைய புருஷனண்டையிலே அடக்கம் பண்ணினார்கள். [11]சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும், மிகுந்த பயமுண்டாயிற்று.

வ 1, அந்த சொத்து அனனியா மற்றும் சப்பீராளுக்கு சொந்தமானது. தேவன் அதை விற்க அவர்களுக்கு சொல்லவில்லை.

வ 2, அவர்கள் அந்த முழு பணத்தையும் தேவனுக்கென்று கொடுப்பது என உறுதி செய்திருந்தனர். ஆனால் தேவன் அதை விற்ற பின் கிடைக்கும் அந்த முழு வருவாயையும் கொடுக்கவேண்டும் என்று அவர்களுக்கு கட்டளையிடவில்லை.

வ 3, பரிசுத்த ஆவியானவராகிய தேவனிடம் பொய்யுரைக்கும்படி சாத்தான் அவர்களின் இருதயத்தை நிரப்பினான்.

வ 4, ஏன் பொய்யுரைத்தாய்? என அபோஸ்தலராகிய பேதுரு அனானியாவிடம் கேட்டார்

வ 5, அனானியா இறந்து விழுந்தான்!

வ 7 மூன்று மணி நேரம் சென்ற பின் அவனுடைய மனைவி வந்தாள். இதிலிருந்து ஆதி காலத்தில் சபையில் வழிபாடு மிகவும் அதிகமான நேரம் சென்றது என்பது தெரியவருகிறது !!

வ 8, பேதுரு சப்பீராளை கேள்வி கேட்டார்

*வ 9, தன் கணவருக்கு என்ன நடந்தது என்பதை அறியாத சப்பீராள் தன் கணவருடன் இணைந்து பொய்யுரைக்க தீர்மானித்தாள்.*

*வ 11, இதை பற்றி கேட்டு அறிந்தவர் மத்தியிலும் திருச்சபையில் உள்ள அனைவரின் மேலும் பெரிய பயம் வந்தது.*

***வ** 13, மற்றவர்களில் ஒருவரும் அவர்களுடனே சேரத் துணியவில்லை. ஆகிலும் ஜனங்கள் அவர்களை மேன்மைப்படுத்தினார்கள்.*

*தேவன் என்ன செய்தார்?*

*நம்முடைய தேவன் மக்களை கொன்று இதன்மூலமாய் மக்கள் சபைக்கு வருவதை தடுத்து மேலும் சபையை வளரவிடாமல் செய்ய முயல்கிறாரா?*

*மத்தேயு 16 இயேசு தன்னுடைய சபையை கட்டபோகும் அடித்தளத்தைப் பற்றி கூறியுள்ளார். மேலும் சபைக்கு வழங்கப்பட்ட முதல் அறிவுரையே ஒழுக்கத்தைப் பற்றியது தான்!*

*சபைக்கான முதன்மையான குறிக்கோள் என்னவெனில்,*

- *பரிசுத்தத்தோடும்,*
- *தூய்மையாகவும்,*
- *நல்லொழுக்கத்தோடும்,*
- *நீதிமானாகவும்*

*இருக்க ஒப்புக்கொடுத்திருக்க வேண்டும்.*

*இதில் நீங்கள் ஒப்புக் கொடுத்திருக்காவிட்டாலோ அல்லது தீவிரம் காட்டாமல் சென்றாலோ பிறகு இந்த ஒழுக்கத்தைக் குறித்து அக்கறை இல்லாதவர்கள் அதில் சேர மாட்டார்கள்.*

*இது இன்றைய கிறிஸ்தவத்தை சித்தரிக்கும் பல சபைகளுக்கு மாறாக உள்ளது. இன்று நாம் மிகுந்த நேசம் உள்ளவர்களாகவும், ஏற்றுக்கொள்ளக் கூடியவர் களாகவும், திறந்த மனதை உடையவர்களாகவும் மேலும் அனைவரையும் தழுவக்கூடியவர்களாகவும் உள்ளோமா என்பதை பற்றியே எண்ணுகிறோம்.*

*நாம் அதைப்போல செய்தால் சபை வளருமா?*

*வ 14, திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடத்தில் அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்,*

*ஆம், அந்த சபை வளர்ந்தது!*

*இதுதான் சபையை வளர்க்க பயன்படும் யுக்தி!*

*சபையில் திருத்துவதான மற்றொரு எடுத்துக்காட்டை நாம் பார்க்கலாம். இப்போது நாம் 1 கொரிந்தியர் 5க்கு திருப்பிக்கொள்ளலாம். முதல் 4 அதிகாரங்களில் சபையில் காணப்படும் பிரிவினைகளை குறித்தும் மேலும் இப்போது பாவம் செய்த சகோதரனை எவ்வாறு திருத்த வேண்டும் என்பதை குறித்தும் கூறியுள்ளார.*

*இந்த அதிகாரத்தில், உடலுடன் கூடிய பாவம், அதாவது விபசாரம் அல்லது வேசித்தனத்தை பற்றியது.*

***1 கொரிந்தியர் 5:9,*** *விபசாரக்காரரோடே கலந்திருக்கக்கூடாதென்று நிருபத்தில் உங்களுக்கு எழுதினேன்.*

*சபைக்கு அந்த நபரை பற்றி தெரியும்.*

*பவுல் அவர்களுக்கு எச்சரித்திருந்தார்.*

*கொரிந்து சபையில் அப்போலோஸ் (Apollos) போன்ற போதகர்களும் மேலும் எருசலேமில் அப்போஸ்தலனாகிய பேதுருவிடம் இருந்து வந்த சில போதகர்களும் இருந்தார்கள்.*

*பவுல் **1 கொரிந்தியர் 6:18**இல் அவர்களுக்கு ஆலோசனை கூறினார். வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான்.*

***1 கொரிந்தியர் 5:1-8,*** *[1]உங்களுக்குள்ளே விபசாரம் உண்டென்று பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிறதே, ஒருவன் தன் தகப்பனுடைய மனைவியை வைத்துக்கொண்டிருக்கிறானே; அது அஞ்ஞானிகளுக்குள்ளும் சொல்லப்படாத விபசாரமாயிருக்கிறதே.*
*[2]இப்படிப்பட்ட காரியஞ்செய்தவனை நீங்கள் உங்களைவிட்டு நீக்காமலும் துக்கப்படாமலும், இறுமாப்படைந்திருக்கிறீர்கள்.*
*[3]நான் சரீரத்தினாலே உங்களுக்குத் தூரமாயிருந்தும், ஆவியினாலே உங்களோடேகூட இருக்கிறவனாய், இப்படிச் செய்தவனைக்குறித்து நான் கூட இருக்கிறதுபோல,*
*[4]நீங்களும், என்னுடைய ஆவியும், நமது கர்த்தராகிய*

*இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தோடே*
*கூடிவந்திருக்கையில், 5அப்படிப்பட்டவனுடைய ஆவி*
*கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி, மாம்சத்தின் அழிவுக்காக, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று தீர்ப்புச்செய்கிறேன்.*
*6நீங்கள் மேன்மை பாராட்டுகிறது நல்லதல்ல; கொஞ்சம்*
*புளித்தமா பிசைந்தமா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா? 7 ஆகையால், நீங்கள்*
*புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே. 8ஆதலால் பழைய*
*புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்.*

*திருமணத்திற்கு வெளியில் கொள்ளும் எந்தவொரு உடலுறவும் பாவம். இந்த பாவம் தேவனுக்கு எதிரானது.*

***ஆதியாகமம் 39:9**, இந்த வீட்டிலே என்னிலும் பெரியவன் இல்லை; நீ அவருடைய மனைவியாயிருக்கிறபடியால் உன்னைத்தவிர வேறொன்றையும் அவர் எனக்கு விலக்கி வைக்கவில்லை; இப்படியிருக்க, நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி என்றான்.*

*தாவீது இதை குறித்து சங்கீதம் 51இல் கூறியுள்ளார்.*

***சங்கீதம் 51:4,*** *தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்; நீர் பேசும்போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந்தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன்.*

*எந்தவொரு பாலியல் நடவடிக்கையோ அல்லது திருமணத்திற்கு முன் ஒரு பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையேயான உறவு தேவனால் முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது.*

*இதை* ***உபாகமம் 22:13-30*** *தெளிவாக விளக்குகிறது.*

- *ஒரு ஆண் ஒரு பெண்ணின் கன்னித்தன்மையயின் மீது தன் திருமணத்தின்போது குற்றம் சாட்டினால், அவளுடைய தந்தை மற்றும் தாயார் தன் மகளின் கன்னித்தன்மையை நிரூபிக்க வேண்டும். அதற்கான சான்று கொடுக்கப்பட்டால், அந்த ஆண்ணை தண்டிக்க வேண்டும். அவன் அந்த பெண்ணின் தந்தைக்கு அபராதம் செலுத்தி மேலும் அவளை விவாகரத்து செய்ய அனுமதி என்றும் இல்லை. சான்று ஏதும் இல்லையனில், அந்த பெண் தன்னை விபசாரத்தில் ஈடுபடுத்தியதற்காக கல்லெறிய வேண்டும்.*
- *விபச்சாரத்தில் சிக்கிய மனுஷனையும் மனுஷியையும் கொல்ல வேண்டும்.*
- *ஒரு ஆண் தனக்கு நிச்சயித்த பெண்ணை சந்தித்து மேலும் அவளுடன் படுத்துறங்கினால் அவன் மீது கல்லெறிய வேண்டும். அந்த பெண்ணின் மீது*

கல்லெறிவதா இல்லையா என்பது அந்த சம்பவம் எங்கு நிகழ்ந்தது என்பதை பொருத்ததேயாகும். அவள் ஒரு நகரத்தில் இருந்திருந்தால், அவள் கத்தாத காரணத்தினால், அவனுடன் சேர்த்து அவள் மீதும் கல்லெறியப்படும். அவள் அந்த கிராமப்புறங்களில் இருந்திருந்தால், அவளை வாழ அனுமதிப்பார்கள், ஏனெனில் அவள் கத்தியிருக்கலாம் ஆனால் யாரும் அதை கேட்டிருக்கமாட்டார்கள்.

- ஒரு ஆண் தனக்கு நிச்சயிக்கப்படாத ஒரு பெண்ணை சந்தித்து அவளுடன் படுத்துறங்கினால் அவளுடைய தந்தைக்கு 50 ஷிக்கள்கள் (shekels) வழங்கப்பட வேண்டும். அவர்கள் திருமணம் செய்துகொண்டு, மேலும் அவன் ஒருபோதும் அவளை விவாகரத்து செய்ய முடியாது.
- ஒரு ஆண் ஒருபோதும் தன் தந்தையின் மனைவியை திருமணம் செய்துகொள்ள கூடாது. உங்களால் உங்களுடைய மாற்றாந்தாயை உங்களுடைய தந்தையின் மரணத்திற்கு பின் திருமணம் செய்துகொள்ள முடியாது.

அதனால், நாம் கொரிந்துவில் உள்ள சபையின் மீது நம்முடைய கவனத்தை திருப்பிக்கொள்ளலாம். பவுல் அவர்களிடம், அவர்களை விரைவில் சந்திக்கப் போவதாக கூறியுள்ளார்.

***1 கொரிந்தியர் 4:19 &21,*** *19 ஆகிலும் கர்த்தருக்குச் சித்தமானால் நான் சீக்கிரமாய் உங்களிடத்திற்கு வந்து,*

*இறுமாப்படைந்திருக்கிறவர்களுடைய பேச்சையல்ல, அவர்களுடைய பெலத்தையே அறிந்துகொள்வேன்.*

*[21]உங்களுக்கு என்னவேண்டும்? நான் பிரம்போடு உங்களிடத்தில் வரவேண்டுமோ? அல்லது அன்போடும் சாந்தமுள்ள ஆவியோடும் வரவேண்டுமோ?*

*கொரிந்துவிலுள்ள சபை இதைக்குறித்து சிரத்தைக் கொள்ளவில்லை. அதனால், பவுல் அங்கு விரைவில் வரவிருப்பதாக கூறுகிறார். அவர்கள் அதை திருத்திக் கொள்ளாமல் அதற்கு பதிலாக, அதன்மீது கர்வத்துடன் இருந்தார்கள்.*

*சபை எந்தவித பாவத்தையும் பொறுத்துக்கொள்ளக் கூடாது. இயேசு தியத்தீராவில் (Thyatira) உள்ள சபைக்கு எழுதினர்.*

***வெளி 2:18-21,*** *[18]தியத்தீரா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: அக்கினிஜுவாலை போன்ற கண்களும், பிரகாசமான வெண்கலம்போன்ற பாதங்களுமுள்ள தேவகுமாரன் சொல்லுகிறதாவது;*
*[19]உன் கிரியைகளையும் உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும், உன் பொறுமையையும், நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்புசெய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன்.*
*[20]ஆகிலும், உன்பேரில் எனக்குக் குறை உண்டு; என்னவெனில், தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரீயானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம்பண்ணவும் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப்*

*போதித்து, அவர்களை வஞ்சிக்கும்படி நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய். [21]அவள் மனந்திரும்பும்படியாய் அவளுக்குத் தவணைகொடுத்தேன்; தன் வேசிமார்க்த்தை விட்டு மனந்திரும்ப அவளுக்கு விருப்பமில்லை.*

*இயேசு அவர்களை மனந்திரும்பும்படி எச்சரிக்கை செயய்தார்ர்!*

*அத்தகைய மனிதர்களை வெளியேற்றுமாறு பவுல் அவர்களிடம் கூறுகிறார். பவுல் மேலும் அவனுடைய ஆவியை கொடுக்காமல் அவனுடைய சரீரத்தை சாத்தானுக்கு கொடுக்குமாறு கூறுகிறார். ஏன்?*

*யோபுவினுடைய கதை உங்களுக்கு நினைவில் உள்ளதா*

*மேலும் தியத்தீராவிலுள்ள (Thyatira) சபைக்கு இயேசு என்ன கூறினார் என்பதை பாருங்கள்.*

***வெளி 2:22,** இதோ, நான் அவளைக் கட்டில்கிடையாக்கி, அவளுடனே விபசாரஞ் செய்தவர்கள் தங்களுடைய கிரியைகளைவிட்டு மனந்திரும்பாவிட்டால் அவர்களையும் மிகுந்த உபத்திரவத்திலே தள்ளி,*

*பாவிகள் தங்கள் மாம்சத்தில் துன்பப்படகூடும், இதன்மூலமாய் அவர்கள் மனந்திரும்பி தேவனிடம் திரும்பக்கூடும். தேவன் தன்னுடைய எதிரியை கொண்டு தன்னுடயை குழந்தைகளை திருத்தவோ அல்லது ஒழுங்கு படுத்தவோ செய்வார்.*

*தேவன் நம்மை சரீர சம்பந்தமாக ஒழுங்கு செய்ய சாத்தானை உபயோகப்படுத்துவார். உங்களிடம் ஏதேனும் நோய் இருந்தால், உங்களுடைய பாவத்தை*

*ஒப்புக்கொள்ளுங்கள் என்று இந்த வசனம் கூறுகிறது. ஏன்? ஏனெனில் உங்களுடைய அநேக நோய்கள் பாவத்தின் விளைவினால் வந்ததாக உள்ளது. உடல் நோயானது கடவுள் சிட்சிக்கும் கோலாக இருக்கலாம்.*

*ஏனென்றால் அவர் நேசிக்கும் பிள்ளையை அவர் ஒழுங்கு செய்கிறார்!*

***எபிரெயர் 12:6,** கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்.''*

*வ 6-7, அத்தகைய புளித்தமாவை நாம் அகற்றாவிட்டால், முழு மாவும் புளிப்பாகிவிடும்.*

***யாத்திராகமம் 12:39**, எகிப்திலிருந்து அவர்கள் கொண்டுவந்த பிசைந்தமாவைப் புளிப்பில்லா அப்பங்களாகச் சுட்டார்கள்; அவர்கள் எகிப்தில் தரிக்கக் கூடாமல் துரத்திவிடப்பட்டதினால், அது புளியாதிருந்தது; அவர்கள் தங்களுக்கு வழிக்கென்று ஒன்றும் ஆயத்தம்பண்ணவில்லை.*

*இஸ்ரவேலர் தங்கள் வாழ்நாள் முழுவதையும் எகிப்த்தோடு முழுமையாக இணைத்துக் கொண்டிருந்தனர். கடவுள் பஸ்கா செயலின் மூலமாய் அவர்களின் எகிப்திய வாழ்க்கையை அவர்களிடமிருந்து பிரிக்கிறார். அவர்கள் அந்த இரத்தத்தை தங்களின் வீட்டுவாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளிகுமாறு கட்டளையிடப்பட்டது. அவர்கள் அதை செய்தார்கள். இறப்பின் தேவதூதன்*

*கடந்து, மேலும் அந்த இறப்பின் தேவதூதன் எகிப்து முழுவதிலும் உள்ள முதற்பேறானவரை படுகொலை செய்தான். தேவன் இஸ்ரவேலர்களுக்கும் எகிப்தியர்களுக்கும் இடையில் ஒரு வேறுபாட்டை உண்டாக்கினார்.*

- *ஆட்டுக்குட்டியின் பலியானது இஸ்ரவேலர்களுக்கும் எகிப்தியர்களுக்கும் இடையேயான வேறுபாட்டை உணர்த்துவதாக இருந்தது.*
- *கிறிஸ்துவின் பலியானது விசுவாசிகளுக்கும் உலகத்திற்கும் இடையிலான வேறுபாடகும்.*
- *பஸ்கா ஆட்டுக்குட்டியானது இஸ்ரவேலர்கள் தங்களுடைய பழைய வாழ்வை விட்டுச்சென்றதற்கான வேறுபாட்டின் அடையாளமாகும்.*
- *பாஸ்கா இரவின் போதுதான் இஸ்ரவேலின் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டு, மேலும் அவர்கள் அதை விட்டுச்சென்றனர்.*
- *நாம் நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியைப் பெற்றோம், சிலுவையில் மரித்து, உலகத்தோடுடனான நம் உறவை துண்டித்து, வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்கு நம்மை விடுவித்தார்.*

*வ 11, தேவன் சபையிலுள்ள சகோதரரைப் பற்றி கரிசனையாக உள்ளார் என்பதையும் சபைக்கு வெளியில் பாவம் செய்பவரை குறித்து அல்ல என்பதை தேவனுடைய வார்த்தை நமக்கு தெளிவாக விளக்குகிறது.*

*வ 12, சபைக்குள் இருப்பவர்களை நாம் நியாயந்தீர்க்க வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டுள்ளார். சபைக்கு வெளியில் இருப்பவர்களை தேவன் நியாயத்தீர்த்துக்கொள்வார்.*

ஆகையால், கொரிந்து சபையிலிருந்து இந்த முழு அத்தியாயத்தில் நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?

அவரது மாற்றாந்தாயோடு பாவஞ்செய்த சகோதரரை தேவாலயத்தில் இருந்து வெளியேறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்.

பவுல் அதற்கு ஒப்பான காரியத்தை எபேசுவிலுள்ள சபையிலும் செய்தார்

***1 தீமோத்தேயு 1:20,*** *இமெனெயும் அலெக்சந்தரும் அப்படிப்பட்டவர்கள்; அவர்கள் தூஷியாதபடி சிட்சிக்கப்பட அவர்களைச் சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தேன்.*

கொரிந்து சபையிலுள்ள இந்த சகோதரரின் முடிவு என்ன?

***2 கொரிந்தியர் 2:5-11,*** *[5]துக்கமுண்டாக்கினவன் எனக்குமாத்திரமல்ல, ஒருவாறு உங்களெல்லாருக்கும் துக்கமுண்டாக்கினான்; நான் உங்கள் எல்லார்மேலும் அதிக பாரஞ்சுமத்தாதபடிக்கு இதைச் சொல்லுகிறேன். [6]அப்படிப்பட்டவனுக்கு அநேகராலுண்டான இந்த தண்டனையே போதும். [7]ஆதலால் அவன் அதிக துக்கத்தில் அமிழ்ந்துபோகாதபடிக்கு, நீங்கள் அவனுக்கு மன்னித்து ஆறுதல்செய்யவேண்டும். [8]அந்தப்படி, உங்கள் அன்பை அவனுக்குக் காண்பிக்கும்படி உங்களை*

*வேண்டிக்கொள்ளுகிறேன். [9]நீங்கள் எல்லாவற்றிலேயும் கீழ்ப்படிந்திருக்கிறீர்களோ என்று உங்களைச் சோதித்தறியும்படி இப்படி எழுதினேன், [10]எவனுக்கு நீங்கள் மன்னிக்கிறீர்களோ, அவனுக்கு நானும் மன்னிக்கிறேன்; மேலும் எதை நான் மன்னித்திருக்கிறேனோ, அதை உங்கள்நிமித்தம் கிறிஸ்துவினுடைய சந்நிதானத்திலே மன்னித்திருக்கிறேன். [11]சாத்தானாலே நாம் மோசம்போகாதபடிக்கு அப்படிச் செய்தேன்; அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே.*

***2 கொரிந்தியர் 2:5-11****இல் படித்தது போல, அந்த சகோதரர் தேவனிடம் மனந்திரும்பியதை நாம் காணலாம். அதனால் அபோஸ்தலராகிய பவுல் அவரிடம் தேவ அன்பை காட்டும்படி அவர்களிடம் கூறியுள்ளார்.*